கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# சுவாமி விபுலாநந்தர் நினைவுப் பேருரை

## — 2 —

## "சூழலும் சமூகமும் பண்பாடும் - சுவாமி விபுலாநந்தர் நோக்கு"


பேராசிரியர் சி. தில்லைநாதன்

*தலைவர் / தமிழ்த்துறை,*

*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை,*

*பேராதனை.*


**23 - 08 - 1992**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலும் சமூகமும் பண்பாடும் - சுவாமி விபுலாநந்தர் நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலாநந்தர்
# நினைவுப் பேருரை
# 1992

கிழக்கு மாகாணம் தந்த உலகின் முதலாவது தமிழ்ப் பேராசிரியரும், அண்ணாமலை, இலங்கைப் பல்கலைக் கழகங்களின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியரும், முத்தமிழ் வித்தகரும், யாழ் நூலுடன் மதங்கசூளாமணி முதலான அரிய நூல்களை ஆக்கியவருமான சுவாமி விபுலாநந்தரின் நினைவுப்பேருரைகளை புளியந்தீவு கிராமோதய சபையின் அனுசரணையுடன் கிழக்குப் பல்கலைக்கழகம் சிறப்பாக நடாத்திவருகின்றது. நிகழ்ந்துவரும் சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழாக்களுக்கு முத்தாரமாக இந்த நினைவுப் பேருரையை ஒழுங்குசெய்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்களை நுணுகி ஆராய்ந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்கள் இவ்வரிசையின் இரண்டாவது நினைவுப் பேருரையை நிகழ்த்துவது சாலவும் பொருத்தமுடையதாகும்.

**செயற்குழு,**

**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மக்கள் எல்லோரும் இவ்வுலகிலே மகிழ்வுடனும், நீதியுடனும், மதிப்புடனும் இசைந்து வாழவேண்டுமென்ற வேட்கைமீதூரப் பெற்றவர் சுவாமி விபுலாநந்தர். அந்த வேட்கையின் விளைவானவையாகவே அவரது சிந்தனைகளும், செயல்களும் அமைந்தன. சென்றகாலம்பற்றிய தெளிவோடும்' எதிர்காலம்பற்றிய கரிசனையோடும்; நிகழ்காலக் கருமங்கள் மேற்கொள்ளப்படுமாயின் சூழலும், சமூகமும், பண்பாடும் சிறக்கும் என்று அவர் கருதியதாய்த் தெரிகிறது. அவை சம்பந்தமாக இன்று எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளின் காரணங்களை விளங்கிக்கொள்ளவும், அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகளைத் தேடவும் அவரது சிந்தனைகள் உதவக்கூடியன.

சுவாமி விபுலாநந்தர் நினைவினைக் கொண்டாடும் வகையிலான கிழக்குப் பல்கலைக்கழக நடவடிக்கை, மனித வாழ்வு மேன்மையுற அவரது கருத்துக்கள் துணையாகும் என்ற நம்பிக்கையின் அடியில் மேற்கொள்ளப்படுவதாகவே தோன்றுகிறது. அதை மெச்சிப் பாராட்டாதிருக்கமுடியாது.

இவ்வுரைக்குத் தூண்டுகோலாய் அமைந்தவர் கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சந்தானம் ஆவார். அவரது கெழுதகை அன்பும், ஆர்வமும் என்றும் மறக்கற்பாலனவன்று. அவருக்கு மிகுந்த நன்றியுடையேன். அந்தவகையில், கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மனோ சபாரத்தினம், பதிவாளர் திரு. க. நடராஜா, முன்னாட் பதிவாளர் டாக்டர் வே. சிவலிங்கம் ஆகியோருக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டவன்.

எண்ணுந்தோறும் இறும்பூதெய்தவைக்கும் வகையிலே செயற்பட்ட சுவாமி விபுலாநந்தரின் நினைவாக ஓர் உரையினை நிகழ்த்தும் பேற்றினை எனக்கு நல்கிய கிழக்குப் பல்கலைக்கழகச் செனட் சபைக்கு என் மனப்பூர்வமான நன்றி உரித்தாகும்.

**பேராசிரியர் எஸ். தில்லைநாதன்**
தலைவர் / தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை,
பேராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலும் சமூகமும் பண்பாடும் - சுவாமி விபுலாநந்தர் நோக்கு

— பேராசிரியர் சி. தில்லைநாதன் —

இவ்வுலகிலே மனித வாழ்வு செம்மையுடனும் சிறப்புடனும் அமையவேண்டும் என்று விரும்புகிறவர்கள் மனித வாழ்வும் வரலாறும் இயற்கையுடன் இணைந்தவை என்பதை முதலில் அறிந்துகொள்ளத் தவறலாகாது. வரலாற்றை உற்று நோக்குமிடத்து, இயற்கைச் சூழலுக்கும் சமூகச் சூழலுக்கும் புறம்பாக மனிதன் தன்னை நோக்குதல் இயலாத ஒன்று என்பது புரியும். மனிதனின் பண்பாட்டு மரபுகளைப் பொறுத்தவரையிலும்கூட, இயற்கைக்கும் சமூகத்துக்குமிடையே நிகழும் தாக்கம் முக்கியத்துவம் மிகுந்ததாகும். அந்த இடைத்தாக்கங்களே மனிதனின் அன்றாட வாழ்க்கை, குடியிருப்புக்கள், வாழ்க்கை முறை, உற்பத்தி முறைகள், உற்பத்தி உறவுகள், உலகியற் பண்பாடு, ஆத்மீக விழுமியங்கள் முதலானவற்றை நிர்ணயிக்கின்றன.

இயற்கைச் சூழ்நிலைகளும் காலநிலையும் மக்களின் நடவடிக்கைகளையும் புலப்பெயர்வுகளையும் தீர்மானிக்கின்றன. முன்னைய காலங்களில் போர்களை நடத்துவதற்குத்தானும் ஏற்ற இயற்கைச் சூழல்களும், நிலவமைப்புக்களும், காலங்களும், தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிவோம். இடமறிதல், காலமறிதல் குறித்து எமது இலக்கியங்களில் பேசப்பட்டிருக்கிறது.

இயற்கைச் சூழலுக்கு ஏற்ப மனிதன் தன்னை இசைவாக்கிக் கொண்டும் சரிப்படுத்திக்கொண்டும் வந்திருக்கிறான். மனிதன் தன்னைச் சூழவிருந்த இயற்கையுடன் கொண்ட உறவுகளின் விளைவான வெளிப்பாடுகளாகவே பண்பாட்டு நியமங்களும், அரசியற் கோட்பாடுகளும், விஞ்ஞான அறிவும் தோன்றி வளர்ந்தனவென்பர். பிள்ளைப் பருவமுதற் பரிச்சயப்பட்ட புவியியற் சூழல், காலநிலை, விலங்குகள், தாவரங்கள் முதலானவை உளவியல்ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, எமது பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், பண்பாடு முதலானவற்றிலும் பிரதிபலிக்கும் என்றும் மனிதவியலறிஞர் கூறுவர். இயற்கைச் சூழலைப் பற்றிய அறிவு வளர வளர அதற்கும் தனக்கும் இடையிலான உறவை விளங்கிக்கொள்ளவும், அதேநேரத்தில் தன் வாழ்க்கை முறைகளை மென்மேலும் விருத்தி செய்துகொள்ளவும் மனிதன் முயன்றுவந்திருப்பதை அவனது வரலாறு காட்டும். இயற்கை என்ற கண்ணாடியில் மனிதன் தன் வாழ்க்கையையும் தன்னுடைய நடவடிக்கைகளின் நோக்கங்கள், தன்மைகள், விளைவுகள் என்பவற்றையும் கண்டு மதிப்பிடல் இயலும்.

நவீன விஞ்ஞானம் வளரும் வரை இயற்கைக்கு மனிதன் அஞ்சியும் மதிப்பளித்தும் வந்திருக்கிறான். தனக்கு அப்பாற்பட்ட சக்தியின் இயக்கமாக அதனைக் கண்ட மனிதன் மிகுந்த அடக்கத்துடன் இயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை வசப்படுத்தி அதற்கு இடையூறு ஏற்படாத வகையில் பெறத்தக்க நன்மைகளைப் பெற்றபோது இயற்கைச் சமநிலை பாதிக்கப்படவில்லை. தத்துவ ஞானிகள் பலர் இயற்கையுலகை இறைவனின் வடிவமாகவே கண்டனர். சுவாமி விபுலாநந்தர் படைத்தவனையும் படைப்பையும் வெவ்வேறாகக் காணவில்லை[1]. அவர் கூறியது இங்கு கவனிக்கத்தக்கது:

''இரண்டாயிரம் மில்லியன் மனிதர்களையும், உயிர்த்துடிப்புள்ள எண்ணற்றவகைத் தாவரங்கள், விலங்குகளையும் கொண்ட இவ்வுலகம் குருட்டுச் சக்திகளின் வெறும் இயந்திரகதிக் கூட்டாக இருக்கமுடியாது. உணர்திறனுள்ளவற்றை மில்லியன் கணக்கிலே பெற்றவளும் தாங்குபவளுமான இந்தப் பொதுவான தாய், வான்வெளியிலே சுழலும் வெறும் உணர்திறனற்ற ஒரு கோளாதல் முடியாது. வாழும் உயிருள்ள ஒன்றாக உலகினைக் கருதுமிடத்து, அதற்கு ஓர் இருதயம் - உயிர்த்துடிப்புள்ள இருதயம் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு உந்தப்படுகிறோம்.''[2]

சுவாமி விபுலாநந்தர் உலகினைப் பல்லாயிரங் கோடி உயிரினங்களைப் பராமரிக்கும் உயிர்த்துடிப்புள்ள இருதயம் கொண்ட தாயாக நோக்குகிறார். எனவே, தமது நன்மைக்கு உகந்தவகையில் உலகினைப் பேணுவது பகுத்தறிவு படைத்தவர்களின் பொறுப்பாகும் என்பது தெளிவாகிறது. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட உறவினைப் புரிந்துகொள்ளாதவிடத்து மனிதனின் சமுதாயப் பிரக்ஞையும் பண்பாட்டு விழுமியங்களும் வளர்ந்த வரலாற்றினை விளங்கிக்கொள்ளல் இயலாது.

மனிதனுக்கும் இயற்கைக்கும் மத்தியிலான இடைத்தாக்கம் காலகதியில் மாறுதலுற்று வந்திருப்பதையும் யாம் அவதானிக்கலாம். இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கும் இயற்கையை மாற்றியமைப்பதற்குமான சாத்தியங்கள் படிப்படியாக அதிகரித்து வந்திருக்கின்றன. அதேவேளையில் இயற்கையிடத்திலான அச்சமும் ஆர்வமும் அருகி வந்திருக்கின்றன. ஆதிகாலத்திலும் இடைக்காலத்திலும் இயற்கைச் சக்திகளுக்கு மக்கள் எவ்வளவுக்கு அஞ்சினார்கள் என்பதைக் காவியங்கள், உபகதைகள், இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ளவியலும். பிற்காலத்தில், குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திகள் தானே எல்லாவற்றுக்கும் மேம்பட்டவன் என்ற பெருமித உணர்வை மனிதனிடத்து வளர்த்துள்ளன.

ஆனால், இன்றைய நிலை என்ன? உலகில் மனித வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்றும், அதற்குக் காரணம் ஆறறிவு படைத்த மனிதரேயன்றித் தாவரங்களோ விலங்குகளோ அல்லவென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இயற்கைச் சூழல் கெடாமல் பாதுகாக்கப்படவேண்டியமையின் அத்தியாவசியம் குறித்த அவலக்குரல் உலகில் நாலாபுறங்களிலிருந்தும் கேட்கிறது.

''நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்''

என்பர் தொல்காப்பியர்[3]. இவையெல்லாம் மாசுபடுத்தப்படுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வுக்கு ஆபத்துத் தோன்றியுள்ளதென்று கூறப்படுகிறது. மனித இனம் தோன்றிப் பல இலட்சம் ஆண்டுகள் வாழ்ந்தபின் இப் பேராபத்துத் தோன்றியது எவ்வாறு என்ற வினா எழுகிறது.

இன்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று பலராலும் குறிப்பிடப் படும் சூழலியல் என்பது உயிரினங்களுக்கும் அவை வாழும் சூழலுக்கும் இடையிலான தொடர்பை விளங்கிக்கொள்வதும் அவை ஒன்றிலொன்று தங்கியிருப்பதைச் செவ்வனே தெரிந்து அதனை மதிப்பதுமாகும். ஆனால், விவசாய சமூக அமைப்பானது விஞ்ஞான வளர்ச்சியின் விளைவான கைத்தொழிற் சமூக அமைப்பாக, நகர்மயப்பட்ட சமுதாயமாக மாறிய போது அந்த விளக்கமும் மதிப்பும் பெருமளவுக்கு மறைந்துபோய்விட் டன. சமூக இணைப்புக்களும் குழுக்கள் ஒன்றிலொன்று தங்கியிருந்த நிலையும் வலுவிழந்துபோயின. நீரும், காற்றும், வயல்களும், காடு களும் பறவைகளும் விலங்குகளும் கொள்வனவுக்குரியனவாயின. தொழில்நுட்ப அபிவிருத்திகளையும் சேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு மானிட முன்னேற்றம் அளவிடப்படலாயிற்று. பண்பாட்டுப் பன்முகப்பாடு பரந்த சந்தை உற்பத்திக்கு ஓர் இடைஞ்சலாக எண்ணப் பட்டது. திறந்த சந்தைப் பொருளாதார அமைப்புக்கு ஈடுகொடுக்க முடியாத நாடுகள், வளர்முக நாடுகள் என்று ஒதுக்கப்பட்டன. கைத் தொழில் வளர்ச்சியும், சந்தைப் பொருளாதார வளர்ச்சியும் கண்டவர் கள் இயற்கைச் சக்தியை மதிக்கும் பணிவினைப் பெரிதும் இழந்தனர். இம்மாற்றங்களின் விளைவான தொழில்நுட்பம், அபிவிருத்தித் திணிசு கள், வாழ்க்கைப் பாணிகள், தேவைகள், பேராசை முதலானவை புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தன.

முன்னேற்றம் என்ற போர்வையில் நாடுகளை ஆக்கிரமித்து உல கின் மூலைமுடுக்குகள் எங்கணும் உள்ள மூலவளங்களைச் சூறையாடி வர்த்தகத்தைப் பெருக்கி இலாபத்தை அதிகரிக்கும் வேட்கையே இன் றைய பிரச்சினைக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

தொழிற்சாலைகள், வாகனங்கள், ரொக்கட்டுகள் முதலியவற் றால் வெளியேறும் நச்சுப் புகை வளிமண்டலத்தை மாசடைய வைக் கிறதென்றும், கிருமிநாசினிகளும், களைகொல்லிகளும் அதிகமாகப் பாவிக்கப்படுவதால் நிலம் மாசடைகின்றதென்றும். கழிவுப் பொருள் களாலும், எண்ணெய், அமிலம் முதலியன கலப்பதாலும் நீர் மாசடை கிறதென்றும் அதேவேளையில் காடுகளும் அழிக்கப்படுகின்றனவென்றும் அறிகிறோம்.

பல அணுவியல் துறைக் கண்டுபிடிப்புக்களும் மனித பாரம்பரிய இரசாயனவியற் கண்டுபிடிப்புக்களும் உயிரியல் ஆயுதங்களும் இன்றைய அதிகார வேட்கைக்கு எதிர்காலத்தைப் பலிகொடுப்பனவாகத் தோன்று கின்றன. அன்பு, அழகு, நன்மை, செம்மை போன்றவற்றை விழையும் மனிதப் பெறுமானங்கள் வலிமையிழந்து வன்முறையும் அதிகார வேட் கையும் தலைதூக்கிவிடுமோ என்ற அச்சம் எழுகிறது. செய்திறன் ஆற் றலே முதன்மையானது, அறிவினால் வருவது வலிமை, வலிமையால் அடக்கி ஆளலாம், அடக்கி ஆள்வதே பாதுகாப்பு என்ற கருத்துக்களும் சமீப காலத்தில் முன்வைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எவ்வாறாயினும், சூழலுக்கு இன்று ஏற்பட்டுள்ள ஆபத்தை மனங்கொண்டு நோக்குமிடத்து மனிதன் தன் புதைகுழியைத் தானே தோண்டுகிறானோ என்ற ஐயம் எழுகிறது. பொருளாதார வளர்ச்சியில் விடாப்பிடியான அவனது போக்கு நாம் வாழும் கிரகத்தின் பிழைப்புக்கே பெரியதோர் அச்சுறுத்தலாக உள்ளது. பூமியதிர்ச்சி, வெள்ளப்பெருக்கு, வரட்சி, பஞ்சம், தொற்றுநோய் பரவல் முதலான இயற்கை நெருக்கடிகள் பலவற்றை மனித இனம் தன் வரலாற்றிலே பலதடவை சந்தித்திருக்கிறது. அந்த அவலங்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் இடம்பெற்றவை. மனிதன் அவற்றால் பாதிக்கப்பட்டானேயன்றி அவற்றைத் தோற்றுவிக்கவில்லை. ஆனால், இன்று எரியும் பிரச்சினையாகிவிட்ட சூழற் பிரச்சினையானது மனித நடவடிக்கைகளின் விளைவாகத் தோன்றிய ஒன்றாகும்.

நாம் வசிக்கும் சூழலைப்பற்றி ஆராயப்புகுவோர் அதனை இரு வகையாகப் பிரித்து நோக்குவர். முதலாவது, பௌதிகச் சூழல் எனப்படும். இரண்டாவது, பண்பாட்டுச் சூழல் எனப்படும். பௌதிகச் சூழல் எனப்படுவது நிலம், நீர், தாவரம், பிராணிகள், வளிமண்டலம் முதலானவை சம்பந்தமானது. பண்பாட்டுச் சூழல் எனப்படுவது தன் தேவைகளைப் பூர்த்திசெய்ய மனிதன் உருவாக்கிய சமயம், கலைப் படைப்புக்கள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், சட்டங்கள், சமூக நிறுவனங்கள், வீடுகள், வீதிகள், தொழிற்கூடங்கள் முதலானவை சம்பந்தப்பட்டதாகும். இவை ஒன்றையொன்று பாதிப்பனவென்பதை விளங்கிக்கொள்ளவேண்டும். தன் தேவைகளைப் பூர்த்தி செய்யவென மனிதன் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலவள, சக்திவள, சூழல், போஷாக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன. அணுக்கதிர் பரவும் ஆபத்து, கட்டுப்பாடற்ற இரசாயனப் பிரயோகம், பொதுத் தொடர்புச் சாதனங்களின் எல்லைமீறிய வளர்ச்சி முதலானவற்றால் பேராபத்துக்கள் தோன்றிவருவதாகக் கூறப்படுகிறது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வேகமான வளர்ச்சியினாலும்,பிரயோகத்தினாலுமே மனித வாழ்வுக்கு அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்று வாதிடுவாரும் உளர். உலகமே மனித நடவடிக்கைகளின் விளைவான ஒன்று என்று எண்ணப்படுமளவுக்குத் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது என்பாரும் உளர். அதன் திட்டமிடப்படாத, கட்டுப்பாடற்ற வளர்ச்சி பாரதூரமான பிரச்சினையாகியுள்ளது உண்மைதான். பூமிவாழ் மக்கள் அனைவரையும் நூறு தடவைகள் அழித்தொழிக்கப் போதுமான அணுவாயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளமையும் உண்மைதான். என்றாலும், நவீன மனித வாழ்வில் அதன் பாதகமான விளைவுகள் தெளிவானவை என்பதற்காகச் சாதகமான தன்மைகளைப் புறக்கணிக்கலாமா?

மனித வாழ்வுக்கு வேண்டிய உணவு, உறையுள், போக்குவரத்து, செய்திப் பரிமாற்றம் முதலானவை சம்பந்தமான வசதிகளைப் பெருக்கிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனித நாகரிக வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்புச் செய்தமை மறுக்கவியலாது. மனிதனுடைய அறிவுச் செயற்பாட்டின் விளைவான விஞ்ஞானம் அவ்வறிவினை வளர்க்கவும் வளம்படுத்தவும் வல்லதென்பதையும் மறந்துவிடலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலாநந்தரைப் பொறுத்தவரை அவர் அதிகார வேட்கைகளையும் போர்களையும் போராயுதங்களையும் வெறுத்தவராயினும், விஞ்ஞானத்தின் தேவையைப் புறக்கணித்தவரல்லர். விஞ்ஞான அறிவைப் பிறமொழி மாந்தரிடமிருந்து வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்தினை முன்வைத்த விபுலாநந்தர்,

''ஐம்பூதத்தைப்பற்றிய அறிவு எம்மிடமுள்ள அளவிற்போதாதோ விரித்துரைக்க வேண்டுமோவெனில், வேண்டும் என்போம். பஞ்சபூதவியற்கையை நுணுகவாராய்ந்த வலிமையினாலன்றோ மேலைநாட்டார் நிலமிசை விரைந்து செல்லும் எந்திரவூர்திகளையும், நீர்மிசை மிதந்துசெல்வனவும் திரையெறி கடலினுட் குளித்துச் செல்வனவுமாகிய பல்வகை இருப்புக்கலங்களையும், தீயின் வேகத்தாலுந்தப்பட்டு வளிமேற்கிளந்து செல்லும் வானவூர்திகளையும், விசும்பு மின்னியக்கமே தூதுவனாகச் செய்தியனுப்பும் மார்க்கங்களையும் அறிந்திருக்கிறார்கள். நமக்கு இனியாரது உருவப் படத்தை நாம் பார்த்து இன்புறுதற்கும், இன்னிசையோடு பாடுவாரது கீதங்களை அவர் கழிந்தபிறகும் நாம் கேட்டின்புறுதற்கும், தூரத்தில் நடந்த செய்திகளை நடந்தவாறே நாம் கண்டு இன்புறுதற்கும், பிற நாட்டுக்குச் சென்றிருக்கும் அன்புடையரோடு வசனித்தின்புறுதற்கும், கருவியாகவமைந்த படிமக் கருவி, பாடற் கருவி, நடன விளக்கு, வாய்த்தந்தி முதலியன ஐம்பெரும் பூதத்தியற்கையையுணர்த்த அறிஞரால் ஆக்கப்பட்டனவாமன்றோ. அன்றியும், பகைவராவார் நாட்டினுட் புகாது அரண்செய்து காத்தற்குப் பயன்படுவனவும் 'யவனரியற்றிய பல்வகைப் பொறி' என நம் முன்னோராற் குறிக்கப்பட்டனவுமாகிய யந்திரங்களையமைப்பதற்குங் கருவியாய் நின்றது ஐம்பூத ஆராய்ச்சியாகும்''

என்று விஞ்ஞான தீபம் என்ற கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கததக்கது.[4]

நவீன தொழில்நுட்பச் சாதனைகள் யாவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் பிரயோகத்தினாலும் உபயோகத்தினாலும் ஏற்பட்ட பிரதிபலன்களேயாகும். இயற்கைச் சூழலில் அறியப்படாதிருந்த அணுசக்தியையும் கருவெப்பச் சக்தியையும் எமக்களித்தது விஞ்ஞானம். விஞ்ஞான அறிவினை மனித சமுதாயத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்தத் தக்கதாய்த் தொழிநுட்பம் அமையவேண்டும். அத்தகைய நோக்குடைய விஞ்ஞான வளர்ச்சியினையும் மனித உயர்வுக்குத் தமமை அர்ப்பணித்த விஞ்ஞானிகளையுமே சுவாமி விபுலாநந்தர் போற்றினார்.

''விஞ்ஞானி பொருள் இலாபம் ஒன்றும் தேடுவதில்லை. விஞ்ஞானிகளல்லாதவர்களால் தனிப்பட்ட இலாபத்திற்காக விஞ்ஞானம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை இங்கு யாம் கவனத்துக்கெடுக்கவில்லை. புதியவற்றை அறிந்துகொள்ளும் ஆர்வத்தினாலும் மானிட அறிவின் எல்லைகளை முன்னெடுக்கும் வேட்கையினாலும் ஆட்கொள்ளப்பட்ட உண்மை தேடுவோன், தூய விஞ்ஞானி தன் பணியில் ஈடுபட்டவனாவான். பங்கு வியாபாரச் சந்தைகளையோ அவைபோன்ற வேறு பணம் பெருக்கும் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையோ பற்றிச் சிந்திப்பதற்கான ஓய்வோ, நாட்டமோ அவனுக்கு இருக்காது. தனது தனிப்பட்ட வருமானத்தைக்கூடத் தன் மனதுக்குப் பிடித்த ஒரு நோக்கத்தின் நலன்கருதி அவன் வழக்கமாக விட்டுவிடுவான். விஞ்ஞானியின் இன்னொரு சிறப்பியல்பு மிகுந்த அடக்கமுடைமையாகும். அறிவு கடல்போற் பரந்ததென்றும் அதனைத் தேடுபவன் கடற்கரையிலே கூழாங்கற்கள் பொறுக்கும் சிறுபிள்ளையைப் போன்றவன் என்றும் கூறியவர் ஓர் உயர்ந்த விஞ்ஞானி ஆவார்'' என்று விஞ்ஞானிகளை அவர் புகழ்கிறார்.[5]

விஞ்ஞான, தொழிநுட்ப வளர்ச்சியினால் தோன்றிய தொழிற்சாலைகள் பெரும்பாலும் நகரங்களில் அமைந்திருப்பதால் அந்நகரங்களில் சனப்பெருக்கம் அதிகரித்துள்ளது. அளவுமீறிய நகர்மயமாதல் சூழல் மாசடைவதற்கும் சமுதாய பண்பாட்டு விழுமியங்கள் சீர்குலைவதற்குமான மற்றொரு காரணம் என்று கருதப்படுகிறது. ஆட்சியதிகாரமும், திட்டமிடும் அதிகாரமும் நகரங்களை மையமாகக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். அதே நேரத்தில் நகரவாசிகள் இயற்கைச் சூழலிலிருந்து பிரிக்கப்பட்டவர்களாய் அச்சூழலைப் பேணுவதில் நாட்டமற்றவர்களாய் உள்ளனர்.

நகரங்கள் தம் செல்வத்தினாலும் கவர்ச்சியினாலும் நகர்ப்புற மக்களைத் தம்பால் வசீகரிக்கின்றன. அங்கு குவியும் மக்களிற் பெரும்பாலானவர்களுக்கு ஏமாற்றமே காத்திருக்கிறது. சிலருக்கு இலாபத்தைப் பெருக்குவதும் பலருக்குப் பிழைத்திருப்பதும் பிரச்சினைகளாகின்றன. நகரம் பலரது உழைப்பினை உறிஞ்சுகிறது. நகர்ப்புறச் சேரிகளில் சுகாதாரமற்ற சூழல்களில் ஏராளம் மக்கள் அவதியுறுகின்றனர். அவர்கள் சீவியத்துக்காக ஒருவருடன் ஒருவர் கடுமையாகப் போட்டியிடவேண்டி இருக்கிறது. வாழ்க்கை விழுமியங்களோ வேரூன்ற முடியாத நிலையில் உள்ளன. பொருள் தேடுவதற்கான அவசரத்துக்கும் போட்டிகளுக்கும் மத்தியில் ஆத்மீக விழுமியங்களைக் கவனிக்க எங்கே நேரமிருக்கிறது? கவனிப்பாரற்ற மந்தையில் ஒன்றான நிலையில் மனிதன் தன் தனித்துவத்தை, அடையாளத்தை இழந்துவிடுகிறான். அவனது சீவியம் நோக்கமற்றதாக, அர்த்தமற்றதாக, சாரமற்றதாக ஆகிவிடுகிறது.

'நகரமே நன்னி' என்ற மலையாளத் திரைப்படம் பார்த்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டாலும் நினைவில் நிற்கிறது. கிராமத்திலிருந்து சென்னை நகருக்கு வந்த சிறிய வறிய குடும்பம் ஒன்று சீரழிந்துபோனதைக் கூறிய பிரபல நாவலாசிரியரான வாசுதேவன் நாயரின் கதை அது. திரைப்படத்தின் ஆரம்பத்தில் ''நகரம் என்பது பல்லாயிரம் விளக்குக் கம்பங்களைக் கொண்ட காடு. இங்கு சிறிய மிருகங்களைப் பெரிய மிருகங்கள் விழுங்கிவிடும்'' என்ற வசனங்கள் ஒலித்தன. நகரத்தில் தனமதிப்பிழந்த நிலையில் இயந்திரகதியில் சீவியம் போக்கும் மனிதனிடம் ஏனையவர்களிடத்தும் சூழலைப் பாதுகாப்பதிலும் சமூகநலனிலும் பண்பாட்டுப் பெறுமானத்திலும் ஆர்வத்தை எவ்வளவு தூரம் எதிர்பார்க்கலாம்? கவனிப்பாரற்ற, அடையாளமற்ற உயிர்வாழ்க்கைக்காக மோசமாகப் போட்டிபோடவேண்டிய நிலையில் ஆத்மீக வெறுமையும் விரக்தியும் காரணமாக ஆக்கிரமிப்பு மனப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையும் வன்முறையும் பெருகலாம் அல்லது தற்கொலைக்கு மக்கள் உந்தப்படலாம். கயானாவில் ஜோன்ஸ்டவுனில் சுமார் 1000 உயிர்களைப் பலிகொண்ட அவலம் எண்ணிப்பார்க்கப்படவேண்டியது

தாம் வேலைசெய்யாது மில்லியன் கணக்கான மனிதர்களின் வேலைகளைக் கையாளும் சில பணப்பேய்களால் மேற்கத்திய உலகம் ஆளப்படும் கொடுமையையும் அங்கு அரசியல் யாப்புக்கமைந்த அரசாங்கம், சுதந்திரம், விடுதலை, பாராளுமன்றம் என்பன கேலிக்கூத்தாவதையும் சுட்டிக்காட்டிய சுவாமி விவேகாநந்தர் ஆத்மீக, அத்திவாரம் இல்லாத நாகரிகம் நொறுங்கி விழும் என்றார்.[6] அதனை மேற்கோள் காட்டிய சுவாமி விபுலாநந்தர் மேல்வருமாறு கூறுகிறார்:

> ''நவீன உலகம் தனது விஞ்ஞானச் சாதனைகளைக் கைவிட்டு விட்டுக் கிராம வாழ்வின் நாட்டுப்புற எளிமைக்குத் திரும்பிச் செல்வது சாத்தியமாகுமா? சென்றுபோனதன் உந்துவலுவை இலகுவில் இல்லாமல் செய்ய வியலாது என்ற உண்மையை அறிந்திருப்பதால் அத்தகைய புரட்சிகர நடவடிக்கை எதையும் யாம் ஆதரிக்கவில்லை. நெறியில் மாற்றம் வேண்டும், மானிட நோக்கில் மாற்றம் வேண்டும் என்பதை யாம் வலியுறுத்துகிறோம். இயந்திரம் அங்கே இருக்குமாயினும், எந்த இயந்திரத்தையும்விட எண்ணவியலாதளவு உயர்ந்தவனாக மனிதனைமதிக்க மனிதன் படிக்கவேண்டும். தொழிற்சாலைகள் அங்கே இருக்குமாயினும், தொழிலாளர் தொழிற்சாலையின் வெறும் கையாட்களாக, சக்கரத்தின் வெறும் பற்களாக இருக்க மாட்டார்கள். அவர்களைச் சகோதரர்களாகவும் சமமானவர்களாகவும் வேலைகொள்வோர் நோக்குவார். கல்விக்கும் கருத்து வெளிப்பாட்டுக்குமான சமசந்தர்ப்பங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும். உண்மையான ஆத்மீக நாகரிகத்தில் கணவனும மனைவியும் ஓரிரு பிள்ளைகளை வளர்த்தபின் கூட்டாளிகளாகக் கற்புடன் வாழ்வாராகையால், மிகைச்சனத் தொகைப் பிரச்சினையும் அதன் காரணமாக 'வாழிடம்' தேடுவதற்கான போரும் இரத்தப்பெருக்கும் இடம்பெறா... மனிதன் இரு வாழ்வுடையவன். அவன் சட உலகிலும் ஆத்ம உலகிலும் வாழ்பவன். ஆத்மாவைப் பொறுத்தளவில் செத்தவனாக இருக்கும்வரை சடம் அவனை ஆளும் சக்தி பெறுகிறது. ஆனால், தனது ஆத்மீக பாரம்பரியத்தை அவன் கண்டுணர்ந்த மாத்திரத்தே விலங்குகள் ஒடிந்து விலக மனிதனின் விருப்பம் தன் விடுதலையை உறுதிசெய்யும்.''[7]

கிராம வாழ்க்கையின் எளிமையினை அவர் விரும்பியிருக்கக்கூடுமாயினும், வரலாற்றையும் விஞ்ஞானத்தையும் விளங்கிக்கொண்டவரான சுவாமி விபுலாநந்தர் நவீன விஞ்ஞான வளர்ச்சிகளை இல்லாமல் ஆக்கமுடியாது என்பதை ஒத்துக்கொணடார். இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதை ஏற்றுக்கொண்ட விபுலாநந்தர் மனிதனது மதிப்புப் பேணப்படவேண்டும் என்பதிலும் அவனது வசதிகள் நியாயமான முறையில் கவனிக்கப்பட வேண்டுமென்பதிலும் ஆர்வம் மிகுந்தவராக விளங்கினார். பொருளாசைக்கு அடிமையாகி அலையும் நிலை அவருக்கு முக்கியமான பிரச்சினையாகத் தோன்றியது. அதனைப் புறங்கண்டு ஏனையவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து மனிதன் சமூக அமைதியைப் பேணுவதற்கான மார்க்கம் ஆத்மீக அடித்தளத்தை வலுப்படுத்துவதே என்பது அவரது கருத்தென்பது புலனாகிறது. மனிதச் சிறப்பியல்புகள் இழக்கப்படுவதைத் தடுப்பதும், மனிதனைப் பிறர்மீது ஆர்வமும் பொறுப்புணர்வும் உடையவனாக ஆக்குவதும், மனித வாழ்வைச் சாரமும் அழகும் பொருந்தியதாகக் காண்பதும் அவரது பிரதான குறிக்கோள்களாக விளங்கியமை தெளிவாகிறது.

மனிதச் சிறப்பியல்புகளைப்பற்றி இங்கே எண்ணிப்பார்க்கவேண்டும். மனிதன் எனப்படுபவனை உடலும் உயிரும் சேர்ந்த ஒரு வெறும் கூட்டென்று கொள்ள முடியாது. உண்பதும் உறங்குவதும் சந்ததியை விருத்தி செய்வதுமே அவனது கருமங்களாகா. விலங்குகளும் அவற்றைச் செய்யவல்லன. மனிதனால் அவதானிக்க, சிந்திக்க, பகுத்தாய, திட்டமிட முடியும். அவன் தனது பாதுகாப்பையும் சுகவாழ்வையும் உறுதிப்படுத்தும் வழிமுறைகளைத் திட்டமிடுகிறான். உணவையும் தேவைப்படும் வேறு பொருள்களையும் அவன் உற்பத்திசெய்யக் கூடியவன். வீண் விரயத்தைத் தவிர்க்கவும் அழித்தவற்றை மீள வளர்க்கவும் அவனால் இயலும். தன் தேவைக்கேற்ப பல கருவிகளை அவன் ஆக்கிக்கொண்டிருக்கிறான். எல்லாவற்றுக்கும் மேலாக அவனிடம் எதிர்பார்க்கப்படுபவை உலகோடு ஒட்டி வாழும் பண்பு, நல்லவற்றுக்கும் தீயவற்றுக்கும், உயர்ந்தவற்றுக்கும் தாழ்ந்தவற்றுக்கும் இடையே உகந்தவற்றைத் தேர்ந்தெடுக்கும் திறமை, எதிர்காலத்தினதும் வரப்போகும் சந்ததிகளினதும் நலனை மனங்கொண்டு திட்டமிடும் ஆற்றல் என்பனவையாகும். சமுதாய நலனைக் கருத்திற்கொண்டு, ஆசைகளைக் கட்டுப்படுத்தி, மனதை ஒருமுகப்படுத்தி ஒழுங்காக வழிநடத்தவும் மனிதன் முயன்றுகொண்டிருக்க வேண்டும் என்பது சான்றோர் கருத்தாகும்.

அத்தகைய பண்புகளையும் ஆற்றல்களையும் கொண்டவனாக அல்லது வளர்த்துக்கொள்ளக் கூடியவனாகக் கருதப்படும் மனிதன் சூழலை ஏன் மாசுபடுத்துகிறான்? சமூக நலனுக்கு ஏன் குந்தகம் விளைவிக்கிறான்? அதற்குப் பலவகைப்பட்ட காரணங்களும் விளக்கங்களும் கூறப்பட்டாலும் அடிப்படையாக உள்ளது சுயநலம் என்றே கொள்ளப்படுகிறது. சுயநலத்தின் விளைவான பேராசையும் அதன் காரணமான போட்டி, பொறாமை, பிரிவினை முதலானவையுமே மனிதகுலத்தின் தலையாக பிரச்சினைகளுக்கு மூலகாரணமாகின்றன எனப்படுகிறது. இயந்திரகதிப்பட்ட, மனித உணர்வற்ற பொருள் தேடும் சுபாவம் வளருமிடத்து மனித நேயம் அருகிவிடுகிறது.

பொன் மனிதனுடைய அடிமையேயன்றி, மனிதன் பொன்னுக்கு அடிமையாக வேண்டிய தேவையில்லை [8] என்று கூறும் விபுலாநந்தா, பொருளாதார நோக்கில் அளவுக்கு மிஞ்சிய போட்டியில்லாத சமுதாயத்தில் வாழ்பவன் அதிர்ஷ்டசாலி [9] என்றும், ''ஓய்வின்றி எல்லை கடந்து சொத்தினைத் திரட்டுவதில் தவறுண்டேயன்றிச் சொத்துச் சேகரிப்பதில் தவறில்லை'' [10] என்றும் கூறுகிறார்.

அவரது உள்ளத்தைத் தெளிவாகக் காட்டுவது மேல்வரும் பகுதியாகும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''துரதிஷ்டவசமாகப் பொருள்களைத் தன்னுடமையாக்கும் அடங்காத ஆசையின் விளைவாக மனிதன் இயற்கையை அலங் கோலப்படுத்திவிட்டான். உணவையும் வாழச் சிறு இடத்தை யும் காலநிலை மாறுபாடுகளிலிருந்து பாதுகாக்க உறையுளை யும் தேடுவதில் அது ஆரம்பமானது. உயர் நிலை எய்தி முனிவர்களும் ஞானிகளும் நிலைபெற்று வாழும் அமைதியான சூழ்நிலையில் வாழ்வதற்கு வேண்டிய விடுதலையை மனதுக்கு வழங்குவதற்கு அச்சொற்ப தேவைகள் அவசியமாயின. ஆனால் வெகு விரைவிலேயே பேராசை மனிதனின் மனதைக் கைப் பற்ற வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் மறக்கப்பட் டது. தூதர்கள் எமக்குக் கடவுளின் செய்தியைக் கொண்டு வந்தனர். நாம் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அதன் பலனே இன்று எம்மை எதிர்நோக்கும் அலங்கோலம்.''[11]

பிரிவினைகள், பகைமைகளும், அவற்றால் ஏற்படும் போர்களும் அப்போர்களின்போது பாவிக்கப்படும் பல்வேறுவகைப்பட்ட ஆயுதங் களும் எமது சூழலையும், சமூக உறவுகளையும்; பண்பாட்டையும் எவ் வளவு தூரம் பாதிக்கின்றன என்பதை இன்று விளக்க வேண்டியதில்லை. தெருக்களிலும் ஆறுகளிலும் கடலிலும் மனித உடல்கள் சிந்தப்படுவத னாலும் பலவிடங்களில் அகதிகள் குவிவதனாலும் ஏற்படும் விளைவு களை யாவரும் அறிவர். மரங்களை வெட்டியவர்கள், வீடுவாசல்களை விட்டு வெளியேறிக் குந்தியிருக்க நிழல் வேண்டி மரங்களைத் தேடும் அவலத்தையும் அறிவோம்.

இன, மத, பிரதேசப் பகைமைகளின்றி பல்வேறு இனங்களையும் மதங்களையும் பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் இறைவனின் பிள்ளை களாய் அன்பினால் இணைந்து வாழவேண்டுமென்று விரும்பியவர் விபு லாநந்தர்.

''நமது ஆண்டவனுக்கும் எம் பெருமாட்டிக்கும் நாம் மக்களா யின், ஆன்மகோடிகளாகிய நாமெல்லாம் சகோதரரென்பதை நாம் மறந்து போகக் கூடாது. ஜீவ தயையில்லாதோன் சிவ னிடத்து அன்புடையவனாகான். தயையுடையவனிடத்துத் தன்னல மறுப்புத் தோன்றும். ஆண்டவனிடத்து நாம் ஒன்று பட்டிருக்கின்ற தன்மையுணர்ந்து அதனைச் சதா தியானிப் போமாயின் நமது சன சங்கத்திலே இந்நாட்களிற் காணப் படுகின்ற ஒற்றுமையின்மை, பொறாமை, லோபம் முதலிய துர்க்குணங்கள் நம்மைவிட்டகலும்; ஆன்ம சக்தி விருத்தியடை யும்.''[12]

என்று கூறிய விபுலாநந்தர் இன்னொரு சந்தர்ப்பத்திலே பின்வருமாறு கூறுகிறார்.

''தனித்த போக்கைக் கடைப்பிடிக்கும் தேசங்களைக் காட்டிலும் உலகளாவிய பார்வையை விருத்தி செய்துகொண்டே தேசங் களுக்கு உலகத்தின் இதயத்தை நெருங்கும் வாய்ப்பு அதிக மாகவே இருக்கும். அத்தகைய தனிப்போக்கு பண்பாடோ அரசியலோ பொருளாதாரமோ சார்ந்ததாகலாம். எதுவானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், உலகின் உயிரோட்டத்திலிருந்து விலகி நிற்கும் நாடு பிழைத்திருக்க வாய்ப்பில்லை. அது உடம்புடன் இணங்கிச் செயற்பட மறுக்கும் ஓர் அவயவம்போல் வதங்கிவிழுந்துவிடும். இந்தியர் தம் தரலாற்றின் பெருமைமிக்க காலப்பகுதிகளில் உலக நலன் குறித்துச் சுறுசுறுப்பாகச் சிந்தித்தனர்.''[13]

சுவாமி விபுலாநந்தரின் உலகளாவிய நோக்கு மட்டுமன்று; அவரது உலகியலறிவும், விஞ்ஞான விளக்கமும் வியக்கப்படத் தக்கவையாகும். கூட்டாகவன்றித் தன்னிச்சையாக இனம் சிறப்புறாதென்பது இயற்கை சூழ வாழும் ஏனைய உயிர்களையும் அவற்றின் நலன்களையும் புறக்கணிப்பது எமக்கு அழிவைக் கொண்டுவரும் என்பதை எண்ணிப்பாராதிருத்தல் இயலாது.

மனித வாழ்வின் எதிர்காலம்பற்றிய அச்சம் மிகுந்துவரும் இன்றைய சூழ்நிலையில், சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியமையின் அவசியம் உணரப்படுகிறது. வாழ்க்கையைப் பாதுகாக்கவும் வளம்படுத்தவும் விரிவுபடுத்தவும் அது இன்றியமையாததாகும். மனிதனின் புற உலகச் சூழலும் அக உலகச் சூழலும் ஒன்றையொன்று பாதிப்பனவாகையால் உலகியற் சமூகவாழ்வுக்கும், அகவியலறிவு வாழ்வுக்குமிடையே செம்மையான சம நிலை பேணப்படவேண்டியமையின் அவசியம் குறித்தும் இன்று அதிகமாகப் பேசப்படுகிறது. சூழலைப் பாதுகாப்பதும், அதனுடன் இணைந்து வாழ்வதும்பற்றிய பிரக்ஞை சமுதாயப் பண்பாட்டின் ஒரு கட்டளைக் கல்லாகக் கருதப்படவேண்டும் என்றும் கூறப்படுகிறது.

அது சம்பந்தமான சுவாமி விபுலாநந்தர் நோக்கு இன்றைக்கு மிகுந்த அர்த்தமுடையதாகும். அவர் இயற்கையைப் பிரம்மத்தின் தோற்றமாகவும், ஒழுங்கிசைவை நாடிநிற்குமொன்றாகவும் கண்டவர்.[14] யோகத்தைப்பற்றிப் பேசுமிடத்து, அதைப் பயின்று பழகுவது உடலும், உள்மனமும் ஆத்மாவும் இசைந்து விருத்தியடைவதற்கும், சூழலுடன் இசைந்து வளமாக வாழ்வதற்கும் உதவும் என்கிறார்.[15] மலர்கள் எவ்வாறு இயற்கையின் பகுதியாக விளங்குகின்றனவோ அவ்வாறே ஆண்களும் பெண்களும் விளங்குவர் என்றும் அவ்வாறு சூழலுடன் இசைவுற்று விளங்குமிடத்து அவர்கள் அணிகளாகப் பொலிவர் என்றும் கூறுகின்றார்.[16] சூழலுடன் இசைந்து வளமான வாழ்வை மக்கள் வாழ வேண்டுமென்று விரும்பிய விபுலாநந்தர் இயற்கையிடத்துக் கொண்ட ஈடுபாட்டை மேல்வரும் பகுதி துலக்குவதாகும்:

> ''இயற்கை ஒருபோதும் மனிதனைக் கைவிடவில்லை. ஆனால், தன்னுடைய வக்கரிப்பினால் உந்தப்பட்ட மனிதன் புகைக் கூடுகளைக் கொண்ட அலங்கோலத் தொழிற்சாலைகளை அண்மித்து வாழ்வதற்காக இயற்கையின் தோட்டங்களைவிட்டுச் சென்றுவிட்டான். குழப்படிப் பிள்ளையான மனிதன் தான் விரும்புகிறபோது தாயின் மடிக்குத் திருப்பலாம்.''[17]

இயற்கையைத் தாய் என்று கொள்ளுமிடத்து அதனைப் பராமரிக்க வேண்டியது எமது கடமை என்ற உணர்வும் கூட எழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையன்னையின் அரவணைப்பில் மக்கள் யாவரும் வளமுடன் வாழ வேண்டுமென்பது விபுலாநந்தரின் நோக்கு அந்த வளத்துக்குத் தடையாக உள்ளவை யாவும் ஒழியவேண்டி உழைக்கத் தன்னை அர்ப்பணித்தவர் அவர்.

மக்களில் ஒரு பகுதியினர் வறுமையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடப்பது சூழல் நலனுக்கு உகந்ததாகாது. புறச்சூழலையும் அகச்சூழலையும் அழகுபடுத்தக் கருதிய விபுலாநந்தர், தடாகம், தண்ணீர்ப்பந்தல், சோலை முதலானவற்றை அமைக்க வேண்டுமென்றும் வசிக்குமிடங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு உணவு, உடை முதலானவற்றை வழங்கவேண்டுமென்றும், நோயுற்றவர்களுக்கு உதவவேண்டுமென்றும், வலியுறுத்துவதிலிருந்து அவரது நோக்கினை விளங்கிக்கொள்ளலாம்.[18]

சுவாமி விபுலாநந்தரின் சமயப் பணிகளும், கல்விப் பணிகளும் சமூகப் பணிகளும் சூழலையும் சமூகத்தையும் செம்மைப்படுத்தக் கருதியவையே எனலாம். அதை இன்னொரு வகையாகக் கூறினால், மானிட வாழ்வை மேம்படுத்தக் கருதியவை எனலாம். பின்தங்கிய பகுதிகளுக்கும் கல்வியறிவினையும் ஆத்மீக விளக்கத்தையும் கொண்டுசென்றவர் விபுலாநந்தர். அண்ணாமலைக்கு அருகேயுள்ள திருவேட்களைச் சேரியிலே இரவுப் பாடசாலை அமைத்தது மட்டுமன்றித் தாழ்த்தப்பட்ட மக்களோடு உறவாடி உதவியவர் அவர்.

சூழல் மாசடைவதற்கும் சமூக ஒழுங்கு குழம்புவதற்கும் மனித நடவடிக்கைகளே காரணமாயினும், மனிதனையோ அவனது முக்கியத்துவத்தையோ புறக்கணித்தல் சாலாது. மனிதனை அல்லது மனுக்குல நலனை மறந்த விஞ்ஞானத்தையோ, கல்வியையோ, சமயத்தையோ சுவாமி விபுலாநந்தர் மதித்தவரல்லர். வேதாந்தத்தைப்பற்றிப் பேசுமிடத்து மனிதனின் உள்ளார்ந்த உயர்வையே அது புகட்டுகின்றது என்று கூறிய விபுலாநந்தர், மனிதனைப் பாவியாகவும் பலவீனமானவனாகவும் பரிதாபத்துக்குரியவனாகவும் கருதுவது தவறென்ற கொள்கையை முன்வைத்தார்.[19] மனிதனின் ஒழுக்க மதிப்பை விலைமதிப்பற்றதாகக் கருதியதோடு, உதார வாழ்க்கை முறைகளையும், இனிய நடத்தைகளையும், தூய்மைமிகு சட்டங்களையும், உண்மையின்மீதும், சரியானதன்மீதும் விருப்பினையும், விசாலமான இதயத்தையும், கருணைமிகு கரத்தையும் அவனது ஒழுக்க மதிப்பினைக் காட்டுவனவாகக் கொண்டார்.[20] அதேவேளை வேற்றுமைகளுள் இசைவு காண்பதற்கு மனிதனுக்கு வேண்டிய ஒழுக்கபூர்வமானதும், புத்திபூர்வமானதுமான ஒழுங்குக் கட்டுப்பாடு என்பதையும் அவர் வலியுறுத்தினார்.[21]

இன்று, உயிரின மண்டலத்தில் மனிதனுக்குரிய இடம் யாது என்பது குறித்தும் அவனது கடமைகள், பொறுப்புக்கள் குறித்தும் தொழில் நுட்பத்தின் நோக்கம் குறித்தும் மீளாய்வு செய்யவேண்டிய நிலையில் உள்ளோம். முக்கியமான முடிவுகளை எடுப்பவர்களும், அவற்றின் விளைவுகளைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களுமான மனிதர்களே பொறுப்பான முறையில் நடந்துகொள்கிறார்களா என்ற வினா எழுகிறது. புதியவற்றைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகள் அவற்றினால் தீமைகள் ஏற்படும்போது அதற்குப் பொறுப்பேற்கும் நிலையில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிப்புக்கள் நேர்விளைவுகளையும் பக்கவிளைவுகளையும் ஏற்படுத்துவனவென்பது அறியப்படாததா?

தன்னுணர்வோடும் தொடர்ந்தும் இயற்கைச் சூழலிற் குறுக்கிடும் மனிதன் அதனால் ஏற்படும் மாறுதல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டாமா? கடவுள் தலையிலே பழியைப் போட்டுவிட்டு, மாறுதல் உலகத்தியற்கை என்று கையை விரிக்கலாகுமா? இக்கேள்விகள் எழும் போது தனது எதிர்காலத்தைத் தக்க முறையிலே பொறுப்பேற்றுத் திட்டமிட வல்ல மனித சமூகத்தின் தேவை உணரப்படுகிறது. மனித வாழ்க்கை இந்த மண்ணில் நல்லவண்ணம் அமையவேண்டுமென விரும்புகிறவர்கள் இன்று மானிடத்தையே, அதன் ஆற்றலையும் நீதியையுமே நம்பிக்கையோடு நோக்குகின்றனர்.

மானிட மதியின் சக்தியே இவ்வையகத்தில் யாம் எய்தத்தக்க பெரும் பேறென்று கருதப்படுகிறது. அது இயற்கையை வசப்படுத்த வல்லது என்றும் புதிய ஆற்றல்களை உருவாக்கவல்லது என்றும் கொள்ளப்படுகிறது.

''காலத்தின் விதி மதியைக் கடந்திடுமோ என்றேன்
காலமே மதியினுக்கோர் கருவியா மென்றாள்''

என்று மகாகவி பாரதி பாடியதும் இங்கு நினைவுகூரக்கூடியதாகும். அச்சக்தியினது செயற்பாட்டின் ஒரு வடிவமே விஞ்ஞானம் என்பதும், விஞ்ஞானத்தின் கருவியே தொழில்நுட்பம் என்பதும் தெளிவாகும். அந்த சக்தி மானிடத் தேவைகளுக்கு உகந்தவகையில், 'கூட்டி மானிட ஜாதியை ஒன்றெனக் கொண்டு வையம் முழுதும் பயனுறத்' தக்க வகையிற் கையாளப்பட வேண்டுமென்பதே இன்றைய தேவையாகும்.

விஞ்ஞானமும் சமயமும் கல்வியும் மனித மதியினை வளர்க்க வேண்டுமென்பதும் மானிட சமுதாய முன்னேற்றத்துக்கு உதவவேண்டுமென்பதும் சுவாமி விபுலாநந்தர் நிலைப்பாடு ஆகும். ஆனால், இன்றைய பிரச்சினை என்னவென்றால், தனக்கென்ற சட்ட திட்டங்களுக்கமைந்தவாறு அபிவிருத்தியடையும் தொழில்நுட்பம் மனிதாபிமான நோக்கங்களைக் குறிப்பிடத்தக்களவு தழுவியிருக்கவில்லை என்பதாகும். ஒருவகையில், தொழில்நுட்ப வளர்ச்சியோடு கூட அழிவுத்தன்மையும் வளர்ந்திருப்பதையும் அது இன்று உலகின் பாரதூரமான ஒரு பிரச்சினையாகக் கருதப்படுவதையும் அவதானிக்கலாம். இந்நிலையில், மனித வாழ்வியற் பண்பிலும் சூழலிலும் மானிட விழுமியங்களிலும் தொழில்நுட்பம் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த சிந்தனை குறைவாகவே உள்ளது. மனித வாழ்வுக்குக் குந்தகமான முறையிலே தொழில்நுட்பம் துஷ்பிரயோகம் செய்யப்படும்போது, விஞ்ஞானம் மனித நாகரிக வளர்ச்சிக்கு உதவுவதா அல்லது ஊறுவிளைவிப்பதா என்ற வினா எழுப்பப்படுகிறது.

விஞ்ஞான, தொழில்நுட்ப ஆதிக்கம் மிகுந்துவரும் இன்றைய காலகட்டத்தில், ஒவ்வொன்றும் எவ்வாறு உள்ளன என்பதை மட்டும் ஆராய்ந்துகொண்டு, ஒவ்வொன்றும் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதிற் கவனமற்றவர்களாய், சூழலும் சமுதாய வாழ்க்கையும்பற்றிய பிரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைகளோடு சம்பந்தமற்றவர்களாய் விஞ்ஞானிகள் இருத்தல் பொருந்துமா? விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களினதும் ஆராய்ச்சிகளினதும் சகல விளைவுகளுக்குமான பொறுப்பினை ஏற்கும் மனப்பாங்கும் மானிட நன்மையை முன்னெடுக்கும் ஒழுக்கக் கட்டுப்பாடும் அவர்களுக்கு வேண்டும். மனித சமுதாய நலனை மனதிற் கொண்ட உயர் விஞ்ஞானிகள் உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைந்து கண்டுபிடிப்புக்களின் நன்மை, தீமைகளை உலகுக்கு வெளிப்படுத்தலாம்.

சுவாமி விபுலாநந்தர் உண்மையையும் நன்மையையும் தேடுபவர்களாகத்தான் விஞ்ஞானிகளை நோக்கினார். அத்தகைய விஞ்ஞானிகளை அவர் சமய ஞானிகளோடு ஒப்பிட்டார். "செப்பமான விஞ்ஞானத்துக்கு வேண்டிய மனக் கட்டுப்பாடு சமயத்தால் வேண்டப்படும் கட்டுப்பாட்டோடு ஒத்ததாகும். விஞ்ஞானம் வேற்றுமைக்கிடையே ஒற்றுமையைத் தேடுவதாகும்."[22] என்று அவர் கூறியிருப்பதும் இங்கு எண்ணிப்பார்க்கப்படத்தக்கது. விஞ்ஞானம் மனிதகுலத்துக்கு வாய்த்த கருவியாக வேண்டுமேயன்றிக் கருத்தாவாதலாகாது.

சுயநலத்தின் அடியான எல்லைமீறிய பொருளாசையினால் மனித நாகரிகம் சீரழிவதைத் தடுக்க மானிடத்துக்குள்ள வழி ஆத்மீக விழிப்புணர்ச்சியே என்பதும் சுவாமி விபுலாநந்தர் கருத்தாகும்.[23] ஆத்மீக விழிப்புணர்ச்சிக்கு உதவுவதாகச் சமயம் கொள்ளப்படுகிறது. சுவாமி விபுலாநந்தர் சமயத்தை வாழ்வதற்கான ஒரு வழியாகவும், மனிதனுக்கு உதவும் சக்தியாகவும், வீழ்ந்துபட்ட ஓர் உலகைப் புனருத்தாரணம் செய்யவல்லதாகவும், பேராசையிலும் அச்சத்திலுமிருந்து மனிதகுலத்தை விடுவித்து உலக சகோதரத்துவத்தை முன்னெடுக்கக் கூடியதாகவும் கண்டார்.[24]

கல்வியும், குழலோடும் சமூகத்தோடும் பொருந்தி வாழ உதவுவதாய் அமையவேண்டும். புலன் சென்ற வழியிற் பேராசைகொண்டு தீமை விளைப்பதைத் தடுத்து நல்வழியில் எம்மைக் கல்வி செலுத்த வேண்டும்.

"சென்ற விடத்தாற் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு."[25] என்கிறார் திருவள்ளுவர்.

இன்று பலர் கல்வியை அந்தஸ்த்தை உறுதிப்படுத்துவதாகவும், போட்டியாயுள்ள வரை வீழ்த்தி எம்மைக் காக்கும் போராயுதமாகவும் கருதுகின்றனர். ஆனால், உண்மையான கல்வியென்பது உண்மைகளை அறியவும் அவற்றோடு இணங்கி வாழவும் வழிகாட்டுவதாய் அமைதல் வேண்டும். சுவாமி விபுலாநந்தர் ஒழுக்கத்தை விருத்தி செய்யும், மனிதனை உருவாக்கும் கல்வியைப் போற்றுகிறார்.[26] அவர் சாதாரண மக்கள் மட்டத்திற் கல்வி பரவவேண்டுமென்று கருதியது சூழலையும் சமூகத்தையும் பண்பாட்டையும் பேணுவதற்கு வேண்டிய அறிவு எங்கணும் பரவ வேண்டுமென்ற வேட்கையினால் உந்தப்பட்டே என்றால் அது தவறாகாது. அந்த நோக்கத்துடனேயே தாய்மொழி மூலமான கல்வியையும் அவர் வலியுறுத்தியதாகத் தோன்றுகிறது. "தனது தாய்மொழியை இயல்பாகவும் நேர்த்தியாகவும் பயன்படுத்தக்கூடியவனாக ஆகும்வரை ஒருவன் உண்மையான பண்பாடுடையனாதல் ஒருபோதும் இயலாது."[27] என்று அவர் உரைத்திருப்பது அவதானிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு எனப்படுவது தான் வாழும் சூழலில் மனிதனால் ஆக்கப்பட்டவை சம்பந்தப்பட்டதென்பர். அறிவு, மொழி, வீடுகள், தெருக்கள், பழக்கவழக்கங்கள், சட்டங்கள், இயந்திரங்கள், தொழிற் சாலைகள் முதலானவை அதன் பாற்படும். அவை மனிதனால் மனி தனுக்காக உருவாக்கப்பட்டவை. மனித நலனை முதன்மையாகக் கருதுவதே சிறந்த பெறுமானம் என்பதை ஏற்று, அந்த அடிப்படையில் நோக்குமிடத்து, இயற்கைக்கும் சமுதாயத்துக்கும் இடைப்பட்ட உறவின் மீதும் தன்மீதும் மனிதனுக்குள்ள கட்டுப்பாடே பண்பாட்டின் அளவு கோல் எனலாம். தங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் முயற்சிகளும் தங்கள் வாழ்க்கைக்கு எவ்வாறு உதவும் என்பதை மனிதர் கருத்திற்கொள்ள வேண்டும்.

வாழும் இயற்கைச் சூழலைச் சிரத்தையுடன் நேசபூர்வமாக நோக்குவது மனிதகுலப் பண்பாட்டு மரபாகும். அம்மரபும் நவீன மாற்றங்களின் காரணமாகப் பலமிழந்துவருகிறது. மோதல்கள், புலப் பெயர்ச்சிகள், உல்லாசப் பிரயாணிகள் வருகை, போதை வஸ்துக்களின் பாவனை முதலியனவும் அதற்குக் காரணிகளாகின்றன. பல்வேறு கார ணங்களால் சூழல் மாசடைவதையும் சூறையாடப்படுவதையும் தடுப்ப தற்கு இயற்கையைத் தாயாகப் பேணும் பண்பாட்டு மரபுக்குப் புத் துயிரளிப்பது அனுகூலமாயிருக்கும் என்று கருதப்படுகிறது.

மண்ணியல் மாறுதல்களினாலும் புலப்பெயர்ச்சிகளினலும், மீள் குடியேற்றங்களினாலும், உல்லாசப் பயணிகள் புகலிடவமைப்புக்களாலும் வேறுபல காரணிகளாலும் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் இழக்கப்படு கின்றன. அவ்வாறு பாரம்பரியங்கள் தகர்க்கப்படாதவாறு அவற்றைப் பதிவுசெய்துகொள்வது சூழல்மீதான அபிவிருத்தித் திட்டங்களின் தாக் கத்தைக் குறைக்க உதவும் என்றும் கூறப்படுகிறது. மனிதனின் உலகியல், ஆன்மீகப் பாரம்பரியங்கள் எவ்வளவு பெறுமதிவாய்ந்தவை என்பது அதனால் விளங்கும்.

மூலவேர்களைக் காண விழைவதும் பேண விழைவதும் மனித விழுமியமாகும். சூழற் பாதுகாப்புக்கும், சமுதாய அமைதிக்கும் அது இன்றியமையாதது என்பதனாலேயே பண்டைக் கலைகள், கைப்பணி முறைகள் முதலானவற்றைப் பேணும் முயற்சிகளிலும், காலத்துக்கேற்ற வகையில் அவற்றை வளர்த்தெடுக்கும் முயற்சிகளிலும் பலர் ஈடுபடு கின்றனர்.

பண்டை மொழிவழக்குகளையும் இலக்கிய, இலக்கண வழக்கு களையும் பேணுவதிற் சுவாமி விபுலாநந்தர் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். பல்வேறுபட்டனவும் காலகதியில் மறையக்கூடியனவுமான பேச்சு வழக்குகளைப் பதிவுசெய்து வைக்கவேண்டும் என்ற அவரது விருப்பம் 'சோழ மண்டலத்துத் தமிழும், ஈழமண்டலத்துத் தமிழும்' என்ற அவரது கட்டுரைமூலம் துலாம்பரமாகிறது[28]. அவரது மாணாக்க ராகிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணக் குடாநாட்டுக் குப் பொதுவாயும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாயும் உரிய பேச்சுவழக்கைக் கையாண்டு எழுதிய 'நானாடகம்'[29] என்ற நூலைப் படித்த அருட்டுணர்வில் எழுதப்பட்டது அக்கட்டுரை. சுவாமி விபுலா நந்தர் நாடக மரபுகளிற் கொண்ட ஆர்வத்தின் பெறுபேறு மதங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூளாமணி என்ற நூலாகும். பண்டை இசை மரபுகளைப் பேணும் வேட்கையினால் உந்தப்பட்டுப் பழந்தமிழிசைக் கருவியான யாழை மீளவமைத்த அவரது உன்னத சாதனையான யாழ் நூலில் விபுலாநந்தர் பின்வருமாறு கூறுவர்:

> ''கடல்வாய்ப் பட்டனவும், காலத்தின் மாறுதலினாலே மறைந்து போயினவுமாகிய நூல்கள் மிகப்பல. அந்நூற்பெயர்களைக் கூறிப் பழமை பாராட்டுவதோடு அமைந்திருப்போமா? இல்லை. முன்னிருந்த கலைச் செல்வத்தை மீண்டும் பெறுதற்கு முயல்வோம். அத்தகைய முயற்சி நமது நாட்டிற்கு ஆக்கமளிக்கும்.''[30]

பாரம்பரிய வரலாற்றுணர்வு, நிகழ்கால வாழ்வினைச் செம்மையுடையதாக்கவும் எதிர்காலத்தை நம்பிக்கையோடு பார்க்கவும் பலமளிப்பதாகும். நம்முன்னோர் நமக்களித்த அரும்பெரும் அனுபவங்களையும், அறிவுச் செல்வங்களையும், வாழ்க்கை வசதிகளையும்பற்றிய செவ்விய விளக்கம், எதிர்கால சந்ததியினருக்குக் கூடிய பயன்தரும் முறையில் சூழலையும் சமூக அமைப்பையும் பண்பாட்டையும் பேணி வளம் படுத்தவேண்டும் என்ற உணர்வினைத் தூண்டுவதாகும்.

> ''சென்ற காலத்துச் சீரினை எதிர்காலத்தாருக்கு இயைவிக்கும் நிகழ்காலத்து வினையாகிய தமிழ்த் தொண்டானது மும்மையினையும் தழுவி நின்றது''[31]

என்ற சுவாமி விபுலாநந்தர் கூற்று ஆழ்ந்த சிந்தனைக்குரியது. சென்ற காலத்துச் சிறப்பினை எதிர்காலத்தாருக்கு இயைவிக்க வேண்டுமென்ற உணர்வு வியாபிக்குமிடத்துச் சூழலுக்கும் சமூகத்துக்கும், பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கும் இடையூறு நேர இடமிருக்காது. சென்ற காலத்துடனும் எதிர்காலத்துடனும் சூழலுடனும் சமூகத்துடனுமான பிணைப்பு உறுதியுடன் காலூன்றி வாழ உதவுவதாகும். எம்மைச் சுற்றி வாழ்பவர்களுக்காகவும், எமது எதிர்காலச் சந்ததியினருக்காகவும் சூழலைப் பாதுகாப்போம்; சமூகத்தை வளம்படுத்துவோம்; எதிர்காலத்தை உறுதிசெய்வோம் என்ற ஊக்கம் உள்ளந்தோறும் எழவேண்டும்.

சூழற் சமநிலை கெடுமானால், களைப்புற்கள், கரப்பான் பூச்சிகள், எலிகள் போன்ற சாமர்த்தியமிக்க உயிரினங்களே தப்பக்கூடும் என்கின்றனர். ஒரு பகுதி மக்களும் பிழைத்திருக்கக்கூடுமாயினும் ஆன்மாவோ விழுமியமோ மனிதத்தன்மையோ மிஞ்சுமென எதிர்பார்க்கவியலாது. எதிர்காலத்தைப்பற்றிய கவனமும் சிந்தனையும் இல்லாமற் போகும்போது மனித வாழ்வு முடிந்துவிடும் என்பர். ஆனால், மானிடத்தின் மதியிலும், பலத்திலும் நம்பிக்கையை இழப்பதற்குமில்லை.

எவ்வாறாயினும், இயற்கைச் சூழலின் ஓர் அங்கமாய்க் கூர்ப்படையும் ஒரு சமுதாயத்தில் நாம் வாழும் தாற்பரியத்தை மறந்துவிடுவதற்கில்லை. இன்றைய பிரச்சினை சூழலையும், சமூகத்தையும் ஆக்கிரமிப்பதல்ல; பராமரித்து வளம்படுத்துவதே என்பதை இளம் சந்ததியினர் மனங்கொள்ளவேண்டும். மனித வாழ்வின் உயர் விழுமியங்கள் என்று சுவாமி விபுலாநந்தரால் வலியுறுத்தப்பட்ட அழகு, உண்மை, செம்மை என்பவற்றைப்[32] பேண விழைதல் நன்று.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புக்கள்**

01. Swami Vipulananda, **Ancient Thoughts For Modern Man**, Madras 1992, p. 42.

02. Ibid. p. 21.

03. தொல்காப்பியம், *மரபியல் 91.*

04. *அருள் செல்வநாயகம் (தொகுப்பாசிரியர்)* **விபுலாநந்த செல்வம்**, *சென்னை 1961, பக் 46 - 47.*

05. Swami Vipulananda, op. cit pp. 266-7

06. Ibid. p. 23

07. Ibid. p. 35

08. Ibid. p. 35

09. Ibid. p. 11

10. Ibid. p. 232

11. Ibid. p. 259

12. *ச. அம்பிகைபாகன் (தொகுப்பாசிரியர்)* **விபுலாநந்தர் உள்ளம்**, *யாழ்ப்பாணம் 1976, பக். 46.*

13. Swami Vipulananda, op. cit. pp. 21–22

14. Ibid. pp. 42, 37

15. Ibid. p. 48

16. Ibid. p. 263

17. Ibid. p. 261

18 *ச. அம்பிகைபாகன், மேற்கூறிய நூல், பக். 25, 26, 31, 35*

19. Swami Vipulananda, op. cit. p. 30.

20. Ibid. pp. 14–15

21. Ibid. p. 37

22. Ibid. p. 7

23. Ibid. p. 24

24. Ibid. pp. 6, 8, 75, 242

25. திருக்குறள், *422.*

26. Swami Vipulananda, op. cit. p. 83
*ச. அம்பிகைபாகன், மேற்கூறிய நூல் – பக். 11.*

27. Swami Vipulananda op. cit. p. 262

28. *விபுலாநந்த அடிகள்,* **இலக்கியக் கட்டுரைகள்**, *கொழும்பு 1973, பக். 143 – 151*

29. உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை ஆகிய நான்கு நாடகங்களின் தொகுதியான இந்நூல் 1940 ஆம் ஆண்டு கொழும்பில் வெளியிடப்பட்டது.

30. *சுவாமி விபுலாநந்தர்,* **யாழ்நூல்**, *தஞ்சாவூர், 1947, பக். 26 – 27*

31. விபுலாநந்த அடிகள், **இலக்கியக் கட்டுரைகள்**, *பக். 68.*

32. Swami Vipulananda, op. cit. p. 121.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org